ශ්‍රී ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,851 — 1969 අප්‍රේල් 25 වැනි සිකුරාදා — 1969.4.25

14,851 ம் இலக்கம் — 1969 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 429 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | 445 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 439 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 441 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | 444 | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 444 | நானாவித அறிவித்தல்கள் .. .. | — |


## பதவிகள்—வெற்றிடம்

### "இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. கேள்விக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் விதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம், எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
பதில் அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1968 ம் ஆண்டு திசெம்பர் மீ 20 ந் உ.

(iii)(அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள் ; அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். " இலங்கையர் " என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.

6. யுத்தச்சேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தீயணைக்கும்படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும், தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் (" ஆ " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாகப் பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றேவெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

இல. A.27/X.2079/69

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### பதவி : கல்வி ஆலோசனையாளர், உடற்கல்வி

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள கல்வி ஆலோசனையாளர் (உடற்கல்வி) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 1969.5.10.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1969.5.17.

குறிப்புகள்—(1) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்** : இலங்கை அரசாங்கத்தின்கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாக விருக்கின்றுர்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமாகும். விதவைகள் அனுதைகள் உபகாரச் சம்பளத் திட்டத்துக்கு கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். பெண் ஒருவர் நியமிக்கப்படுமிடத்து அவர் அரசாங்க சேவை சகாய நிதி நலன்களுக்கு உரித்துடையவராவர் ; இந்நோக்கத்திற்கு அரசாங்க சேவை சகாய நிதிக்கு அவர் தனது சம்பளத்தில் 5% செலுத்த வேண்டும். பெண் உத்தியோகத்தர் ஒருவர் 10 வருட சேவையைப் பூர்த்தி செய்யமுன் எந்நேரத்திலேனும் சேமலாப நிதிக்குத் தொடர்ந்து கட்டணம் செலுத்தவா அல்லது இளைப்பாற்றுச் சம்பளத் திட்டத்துக்கு மாற்றப்படவா விரும்புகிறுர் என அறிவிக்க வேண்டும். பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பள விதிகளின் கீழ் அல்லது சேமலாப நலன்களைக் கொண்ட ஒரு பதவியில் அல்லது இளைப்பாற்றுச் சம்பள விதிகளின் கீழ் அல்லது சேம பூர்த்தி செய்திருப்பின், நியமிக்கப்படும் 6 மாத காலத்துக்குமுன் தனது விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும்.

(ii) நியமதாரி, முதற்கண், 3 வருட காலத்துக்கு தகுதி காண் முறையில் நியமிக்கப்படுவார். ஏற்கனவே அரசினர் சேவையில் நிரந்தரமான, உபகாரச் சம்பள உரித்துடைய ஒரு பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படுமிடத்து அவர், முதற்கண், ஒரு வருட காலத்துக்கு பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார்.

(iii) நியமிக்கப்படுபவர் நியமிக்கப்படும் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் அரசினர் சேவை ஆணைக்குழு விதிகளிலும் நிருவாகப் பிரமாணங்களிலும் ஒரு வினுப் பத்திரமும் நிதிப் பிரமாணங்களில் இன்னெரு வினுப் பத்திரமும் கல்விச் சட்டத்தில் இன்னெரு வினுப் பத்திரமுமாக மூன்று வினுப் பத்திரங்களைக் கொண்டதான அரசினர் விதிகளிலும் பிரமாணங்களிலுமான ஒரு பரீட்சையில் சித்தியடைய வேண்டும். நியமதாரி, இப்பரீட்சையில் விதிக்கப்பட்ட காலத்துக்குப் பின் சித்தி அடைந்தால் அங்ஙனம் சித்தி அடைதற்கு மேலதிகமாக எடுக்கப்பட்ட காலம் சம்பள உயர்ச்சிப் பணம் நிறுத்தப்பட்ட காலமாகக் கருதப்படும்.

(iv) தெரிவு செய்யப்படுபவர், நியமனத் திகதியிலிருந்து 4 வருட காலத்துக்குள், பொது எழுதுவினைஞர் சேவை நிறைவேற்று எழுதுவினைஞர் வகுப்பு II ந் தரத்து உத்தியோகத்தர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள சிங்கள/தமிழ் தேசிய மொழிப் பரீட்சையில் காரியத்துக்கேற்ப, சிங்கள/தமிழ் மொழியில் சித்தியடைய வேண்டும். அங்ஙனம் சித்தியடையத் தவறுமிடத்து சம்பள உயர்ச்சிப் பணம் இடைநிறுத்தி வைக்கப்படும். இப்பரீட்சையில் விதிக்கப்பட்ட காலத்துக்குப் பின் சித்தி அடைந்தால் அங்ஙனம் சித்தி அடைதற்கு மேலதிகமாக எடுக்கப்பட்ட காலம் சம்பள உயர்ச்சிப் பணம் இடைநிறுத்தம் செய்யப்பட்ட காலமாகக் கருதப்படும்.

3. **சம்பள அளவுத் திட்டம் :**

இப்பதவிகளுக்குரிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ரூ. 5,520—8 × 360—2 × 480—ரூ. 9,360/- வருடாந்தம். வருடாந்தச் சம்பளம் ரூ. 7,320/- க்கு முன் வினைத்திறமைகாண் தடை ஒன்றுண்டு.

4. **தேவைப்படும் தகைமைகள் :**

ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1969 ம் ஆண்டு மே மாதம் 10 ந் திகதியன்று 30 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப் பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது.

(இ) ஒருவருட பட்டப்பின், விதிவிட பயிற்சி நெறி ஒன்றினை பூர்த்தி செய்தபின் அங்கீகரிக்கப்பட்ட உடற் கல்விக் கல்லூரி ஒன்றினுல் அல்லது நிலையத்தினுல் வழங்கப்படும் தகுதித் தேர்வுப் பத்திரம் ஒன்றைப் பெற்றிருப்பதுடன் உடற் கல்வியில் குறைந்தபட்சம் 3 வருட படிப்பித்தல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

இரண்டு வருட வதிவிட பயிற்சி நெறி ஒன்றினை பூர்த்தி செய்தபின் அங்கீகரிக்கப்பட்ட உடற்கல்விக் கல்லூரி ஒன்றினுல் அல்லது நிலையத்தினுல் வழங்கப்படும் தகுதித் தேர்வுப் பத்திரம் ஒன்றைப் பெற்றிருப்பதுடன் உடற் கல்வியில் குறைந்தபட்சம் 5 வருட படிப்பித்தல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட உடற் கல்விக் கல்லூரி ஒன்றினுல் அல்லது நிலையத்தினுல் நடாத்தப்படும் ஒரு வருட வதிவிடப் பயிற்சி நெறி ஒன்றினைப் பூர்த்தி செய்தபின் உடற்கல்வி பரிசோதகராகக் குறைந்தபட்சம் 10 வருட திருப்திகரமான சேவை புரிந்திருக்க வேண்டும்.

அல்லது

மேற்குறித்துள்ள மூன்று வகுதிகளில் அடங்கும் தகைமைகளுக்குச் சமமான அல்லது உயர்ந்த தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு—மெய்வல்லுநர் விளையாட்டுகளிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட விளையாட்டுகளிலும் கீர்த்தி பெற்றுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும் பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (முக்கிய குறிப்பு—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக் கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு; இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழிநுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழிநுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு—(1) சாதானங்களேயாயினும், சாதனங்களின் படிகளேயாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக் கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும்; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“ஆ” எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் 1 ஆம் பாகம், 2 ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“அ” எனக் குறியிடப்பட்டுள்ளது). அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைப்பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையவராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்.
கொழும்பு 1.
1969.4.18.

4-837—25.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,851

---

## சிறுவர் நல்லொழுக்கப் பரிபாலன திணைக்களம்
### தலைமை ஆசிரியை பதவி

சிறுவர் நல்லொழுக்கப் பரிபாலன திணைக்களத்தில், பெண்கள் சான்று பெற்ற பாடசாலையின் தலைமை ஆசிரியை பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. விண்ணப்பத்திரங்கள் :**

(அ) அபேட்சகர் இவ்வறிவித்தலின் அடியில் குறித்துக் காட்டப்பட்டுள்ள வகையில் மாதிரிப் பத்திரத்தினை அமைத்து தன் கை எழுத்திலேயே நிரப்பி,

(ஆ) சிறுவர் நல்லொழுக்கப் பரிபாலன திணைக்களத்தின் ஆணையாளர், த. பெ. 546, 103, 1/1. த மேல் கட்டிடம், சதம் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு (பெயர் காட்டி முகவரி காட்டப்படலாகாது)

(இ) 10.5.1969 திகதியன்றோ அதற்கு முன்பாகவோ பதிவு செய்யப்பட்ட கடிதத்தில் அனுப்பப்படவேண்டும்.

**குறிப்பு :**

விண்ணப்பப் பத்திரங்கள் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “தலைமை ஆசிரியை பதவிக்கு” எனக் குறிப்பிட வேண்டும்.

**2. இப்பதவிக்கான சம்பள அளவுத்திட்டம் :**

வருடாந்த ஆரம்பச் சம்பளம் ரூபா 3660/- பின்னர் 120 ரூபா வீதம் 2 வருடங்களுக்கும் 180/- ரூபா வீதம் 8 வருடங்களும் 240/- ரூபா வீதம் 5 வருடங்களும் பின்னர் ஆகக்கூடியது வருடாந்தச் சம்பளம் 6,540/- ரூபா ஆகும். வருடாந்தச் சம்பளம் 5,340/- ரூபாவுக்கு முன் தடைகாண் பரீட்சை உண்டு.

**3. நியமன விதிகள் :**

பதவி நிரந்தரமும் இளைப்பாற்றுச் சம்பளமும் உடையது. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் சம்பளத்தில் 5% அரசாங்க சேவை சகாய நிதிக்கு கொடுக்க வேண்டுமன்றி விரும்பினால் இன்னும் 5% கொடுக்கலாம். எப்படியாயினும் அரசாங்கத்தால் 7½% மட்டுமே கட்டப்படும்.

**4. சேவை நிபந்தனைகள் :**—தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள்—

(அ) மூன்று வருட (3) தகுதிகாண் காலத்திற்கு அமைவர்,

(ஆ) நிரந்தரமான உத்தியோகத்தர் தேர்ந்தெடுக்கப்பட்டால் ஒரு வருடம் கடமைபார்க்கும் நியமனமாக கருதப்படுவர்.

(இ) வேலையில் அமர்த்தப்படுவதற்காக தரப்படும் விசேட பயிற்சியை முடித்து அதன் இறுதியில் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் சித்தி அடைய வேண்டும்.

(ஈ) தகுதிகாண் பரீட்சையை கடக்குமுன் தேர்ந்தெடுக்கப்படும் வேலைத்திட்டத்தின் அட்டவணைக்கு அனுசரித்து குறிக்கப்பட்ட பரீட்சையில் சித்தி அடைய வேண்டும்.

(உ) இலங்கை பூராவும் சேவை செய்தல் வேண்டும்.

**5. கல்வியும் மற்றும் தகைமைகளும் :**

(1) இலங்கை வாசி ;

(2) 10. 5. 69 திகதி விண்ணப்பக்காரர் 28 வயதிற்கு குறையாதவராயும் 50 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும் (அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பகாரர்கட்கு மேற்சொல்லப்பட்ட வயதுக் கட்டுப்பாடு அநாவசியமானது) ;

(3) அடையப்பெற்றவராக :—

சர்வகலாசாலைப் பட்டதாரியாகவும் :

(அ) அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனத்தின் சமூக சேவை சம்பந்தமான டிப்புளோமா பத்திரம் அல்லது,

(ஆ) 5 வருட படிப்பிக்கும் அனுபவம் அல்லது,

(இ) அதற்கு சமமான தகுதியுடையவராகவும்

(4) மிகவும் குணமுடையவராகவும் தேக நலனுடையவராகவும் ;

குறிப்பு : சமூக சேவை வேலைகளில் செய்முறை அனுபவமடைந்தவரும் தகைமையும் உடைய அபேட்சகருக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

6. விண்ணப்பக்காரர் தனது விண்ணப்பப்பத்திரத்துடன் கீழ் குறிப்பிட்ட பத்திரங்களில் பிரதி மாத்திரம் இணைத்து அனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புக் கொப்பி (ஞானஸ்தானத்திற்கு அல்லது கல்விக் கட்டளையிற் கொடுக்கப்பட்ட பிறப்புக் கொப்பி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது),

(ஆ) பெற்றுள்ள உயர்தர கல்வித் தராதரப் பத்திரம்.,

(இ) அண்மையில் பெற்ற மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள்.

7. குறிக்கப்பட்ட திகதிக்குப்பின்னுல் இந்தக் கந்தோருக்கு அனுப்பப்படும் விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் மேற்காட்டப்பட்ட 6 ம் பந்தியின்படி தகைமையுடையவராக இருந்தால் விண்ணப்பப்பத்திரங்கள் அவர்கள் வேலை பார்க்கும் திணைக்களத் தலைவர் மூலமாக அனுப்பப்படல் வேண்டும். ஆனுல் குறிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரங்கள் திணைக்களத்தலைவரால் குறிக்கப்பட்ட திகதிக்குள் கிடைத்ததென்றும் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளும்படி போதிய காரணம் காட்டி சிபார்சு செய்தால் அவ்விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

8. இந்த வர்த்தமானியில் பகுதி I, தொகுதி II, ன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பகுதி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனையைப் பார்வையிடுமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றது.

9. அறிவித்தலின் தேவைகளுக்கு அடங்காத விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப் பத்திரங்கள் பெற்றமை ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

10. ஒரு அபேட்சகருக்காக எவ்வித வசீகரத் தொடர்பும் வைத்திருந்தால் குறிக்கப்பட்ட அபேட்சகர் தகுதிபற்றவராக கருதப்படுவர்.

டபிள்யூ. ஆர். பீ. ராஜகருணு,
சிறுவர் நல்லொழுக்க பரிபாலன ஆணையாளர்.

சிறுவர் நல்லொழுக்கப் பரிபாலன திணைக்களம்,
103,1/1 த மெல் கட்டிடம்,
சதம் வீதி,
கொழும்பு 1.

குறிக்கப்பட்ட படிவம்

தலைமை ஆசிரியை பதவிக்கு விண்ணப்பப்பத்திரம்

(1) முழுப் பெயர் :————.
(தெளிவான எழுத்தில்)

(2) நிரந்தர விலாசம் :————.

(3) வயதும் பிறந்த திகதியும் :————.
(பிறப்புக் கொப்பியின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

(4) விண்ணப்பக்காரரின் தந்தை பிறந்த தேதியும் இடமும் :————.

(5) விவாகமானவரா ? அல்லது விவாகமாகாதவரா ? :————

(6) i சித்தியடைந்துள்ள பரீட்சைகள் (உயர்ந்த) :————
(அ) சிங்களம் :————.
(ஆ) தமிழ் :————.
(இ) ஆங்கிலம் :————.
(தராதரப்பத்திரங்களின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
ii. பயின்ற பாடசாலை :————.

(7) சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் வாசிப்பு எழுத்து மொழிபெயர்ப்பு சம்பந்தமான தகுதி :————.

(8) சமூக சேவை சம்பந்தமான தகுதியும் அனுபவமும் :
(பத்திரங்களின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

(9) பாடசாலையை விட்ட காலம் தொடக்கம் செய்த தொழில்களைப் பற்றிய பட்டோலையும் அரசாங்கத்தின் கீழ் வேலை செய்திருந்தால் அதன் விபரங்களும் :————.

(10) தற்போதைய தொழில் :————.

(11) நற்சாட்சிப்பத்திரம் கொடுத்தவர்களின் பெயரும் விலாசமும் :————.

திகதி :————

————
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

குறிப்பு :

பத்திரங்களின் பிரதியேயன்றி மூலப்பிரதிகளை அனுப்பக் கூடாது. அனுப்பப்பட்ட பத்திரங்களை திருப்பி அனுப்பப்படமாட்டது.

4-810—25.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,851

---

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### பொறிமுறை எந்திரவியல் போதனுசிரியர் பதவிகள்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்ப நிலையங்களில் பொறிமுறை எந்திரவியல் போதனுசிரியர் பதவிகளுக்கு கீழே குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. விண்ணப்பங்கள், கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்பட்டு 1969 ம் ஆண்டு மே மாதம் 15 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக " நிரந்தரக் காரியதரிசி (பொது நிர்வாகக் கிளை), கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். (காலியிடங்கள் அம்பாறை, ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையத்தில் உண்டு. காகித உறையின் இடதுபக்க மேல்மூலையில் " பொறிமுறை எந்திரவியல் போதனுசிரியர் பதவி " என தெளிவாக எழுதப்பட வேண்டும்).

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :

இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமாகும். விதவைகள் அனுதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். நியமனம் மூன்று வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் அமையும். அரசாங்கத்தின் கீழ் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை ஏற்கனவே வகிக்குந் ஒருவர் இந்நியமனத்துக்குத் தெரிவு செய்யப்படின், அவருடைய நியமனம் விதிக்கப்படும் ஒரு காலத்திற்கு பதில் நியமனமாக அமையும்.

3. விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளுடையவரெனத் திருப்தியான முறையில் நிரூபிக்க வேண்டும் :—

(i) 1969 ம் ஆண்டு மே மாதம் 15 ந் திகதியன்று 40 வயதுக்கு மேற்படாதவராயும் 21 வயதுக்குக் குறையாதவராயும் இருக்க வேண்டும். (இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு அமையாது).

(ii) சிறந்த நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(iii) (அ) சி. பா. த. பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும் ; அல்லது

(ஆ) க. பொ. த. (சாதாரணதர) பத்திரப் பரீட்சையில், இரு தடவை களுக்கு மேற்படாது தோற்றி, சிங்களம்/தமிழ், எண்கணிதம்/ கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும் ; அல்லது

(இ) சமமான அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும் ;

(iv) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் எந்திரவியல் பட்டம்—பொறிமுறை எந்திரவியல் பாடங்களுடன். (செயல்முறை/கற்பித்தல் அனுபவம் அல்லது இவ்விரு அனு பவங்களும் பெற்றுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப் படும்) ; அல்லது

(v) பொறிமுறை எந்திரவியலாளர் நிறுவனத்தின் உயர்தொழில் தகமைப் பரீட்சைகளின் I ம், II ம், III ம் பகுதிகளில் சித்தி (செயல்முறை/கற்பித்தல் அனுபவம் அல்லது இவ்விரு அனுபவங்களும் பெற்றுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப் படும் ; அல்லது

(vi) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் வழங்கப்படும் மாலை நேர எந்திரவியல் (பொறிமுறை) தராதரப் பத்திரம் பெற்றி ருப்பதுடன் 5 வருட செயல்முறை/கற்பித்தல் முறை அல்லது இவ்விரு அனுபவங்களும் பெற்றிருக்க வேண்டும் ; (கீழே உள்ள குறிப்பைப் பார்க்கவும்) ; அல்லது

(vii) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் வழங்கப்படும் கனிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்சார, பொறிமுறை) தராதரப் பத்திரமும் 5 வருட செயல்முறை/கற்பித்தல் முறை அல்லது இவ்விரு அனுபவங்களும் ; அல்லது

(viii) சமமான அல்லது உயர்ந்த தகமைகள் ;

(ix) சிங்கள மொழியில் வகுப்புகளை நடாத்தக்கூடியவராய் இருக்க வேண்டும் ; அல்லது சிங்கள மொழியில் வகுப்புகளை நடாத்தக் கூடிய தேர்ச்சியை நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத் துக்குள் பெற வேண்டும்.

**குறிப்பு :** மேலுள்ள (vi) ம், (vii) ம், (viii) ம் உப பந்திகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகமைகளுடன் தெரிவு செய்யப்படும் அபேட்சகர் கள் போதியளவு செயல்முறை கற்பித்தல் அல்லது இவ்விரு அனுபவ மும் பெற்றிருக்க வேண்டும்) எனினும் 5 வருடத்துக்குக் குறைந்தளவு அனுபவம் பெற்றுள்ள நியமதாரி ஒருவர், தேவைப்படும் அனு வத்தைப் பெறும்வரை, பதில் நியமன முறையில் வருடாந்தம் ரூபா 3,420/– வழங்கப்படுவார்.

**4. இப்பதவிக்குரிய வருடாந்தச்சம்பள அளவுத்திட்டம் பின்வரு மாறு :—**

ரூபா 3,420—4 × 120—8 × 180—5340/–. ரூபா 4,080, ரூபா 4,800 ஆகிய வருடாந்தச் சம்பளங்களைக் கடந்து செல்லுமுன் நியமதாரிகள் வினைத் திறமைகாண் தடைப் பரீட்சைகளில் தேற வேண்டும்.

5. அரசினர் சேவையிலுள்ள, தகைமையுடைய அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்படும் திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் இத்தகைய விண்ணப்பங்கள், விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதித் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டனவென்றும் நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக்கொள்ளும்படி அப்பகுதித் தலைவர் சிபார்சு செய்தாலன்றி, ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. எனினும் விண்ணப்பத்தின் ஒரு பிரதி இவ்வமைச்சருக்கு நேரே அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு. சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பெற்றுள்ள அதியுயர்ந்த கல்வித் தராதரப் பத்திரமும் உயர் தொழிற் தராதரப் பத்திரங்களும் ;

(இ) விண்ணப்பதாரியின் தகைமைகள், ஒழுக்கம், இப்பதவிக்கு நியமிக்கப்படுதற்கான அவருடைய தகுதி ஆகியவற்றைக் குறிப் பிடும் மூன்று சமீபகால நற்சாட்சிப் பத்திரங்கள்.

**முக்கிய குறிப்பு :** அரசினரின் கீழ் ஏற்கனவே சேவையிலுள்ளவர்கள் மேற்போந்த (இ) ம் உபபந்தியில் குறிப்பிட்டுள்ள நற்சாட்சிப் பத்திரங்களை அனுப்ப வேண்டியதில்லை.

7. விண்ணப்பங்களும் ஏனைய உரி சாதனங்களேனும் கடிதங் களேனும் இவ்வமைச்சின் நிரந்தரக் காரியதரிசியின் விலாசத்துக்கே அனுப்பப்பட வேண்டும் ; எக்காரணத்தையிட்டும் அவைகள் எட் வுத்தியோகத்தரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படலாகா.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக்கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்ப தாரிகள், கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற் பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

எனதெண் : பொ. நி. 3/207.
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1969 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 15 ந் திகதி.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

### கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

**பொறிமுறை, எந்திரவியல் போதனாசிரியர் பதவி**

(தொடர்பெண் பொ/நி/207)

($8\frac{1}{2}''$—$13\frac{1}{2}''$ அளவு முழுத்தாளில் விண்ணப்பம் தயாரிக்கப்படவேண்டும்)

1. முழுப் பெயர் (தெளிவான எழுத்துகளில்) : திரு/திருமதி/ செல்வி : ————.

2. தபால் விலாசம் : ————.
(விலாசத்தில் ஏற்படும் யாதேனும் மாற்றம் உடனே அறிவிக்கப்பட வேண்டும்)

3. சாதியம் : ————.
(வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா இலங்கையர் எனக் குறிப்பிடுக. பதிவு காரணமாக நீர் இலங்கைப் பிரசையாயின் பிரசாவுரிமைப் பத்திரத்தின் தொடர்பிலக்கத்தையும் தகுதியையும் குறிப்பிடுக)

4. (அ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி யன்று உள்ளபடி வயது : வரு—— மா—— நாள்——
(ஆ) பிறந்த திகதி : வரு—— மா—— நாள்——
(பிறப்புச்சாட்சிப் பத்திரத்தின் பிரதியை இணைக்கவும்)

5. பின்வருவோர் பிறந்த இடம் :
(அ) விண்ணப்பதாரி : ————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் : ————.

6. (அ) விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா :——
(ஆ) விவாகம் செய்தவராயின், பின்வரும் விபரங்களைக் கொடுக்க:'
(i) விவாகத் திகதி : ————.
(ii) பிள்ளைகளின் எண்ணிக்கை : ————.

7. (அ) 15 வயது தொடக்கம் படித்த பாடசாலைகள், கல்லூரிகள் நிலையங்கள் : ————.

| பொதுக் கல்வி | | | உயர்தொழில் / தொழில்நுட்பக் கல்வி (யாதேனும் படித் திருப்பின்) | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் | வரை | நிலையம் | தொடக்கம் | வரை |
| | | | | | |

(ஆ) கடைசிப் பாடசாலையிலிருந்து விலகிய திகதி : ————.

8. கல்வித் தகைமைகளும் கடைசியாகச் சித்தி எய்திய பரீட்சையும் அதன் திகதியும் : ————.

(அ) சிங்களத்தில் : ————.

(ஆ) ஆங்கிலத்தில் : ————.

(இ) தமிழில் : ————.

9. உயர்தொழில் தகைமைகளும் தொழில் நுட்பத் தகைமைகளும் அல்லது இவைகளில் யாதேனும்—(யாதேனும் பெற்றிருப்பின்) : (அ) அவைகள் பெற்ற திகதிகளும் (ஆ) படித்த நிலையங்களும் :

10. வாசிப்பு, எழுத்து, சம்பாஷணை, பேச்சு மொழிபெயர்ப்பு ஆகிய வற்றில் பின்வரும் மொழிகளில் பெற்றுள்ள தேர்ச்சி :
(அ) சிங்களம் : (ஆ) தமிழ் : (இ) ஆங்கிலம் :

11. விசேட தகைமைகள் (அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள விசேட தகைமைகளை/அனுபவத்தை அல்லது இவ்விரண்டினையும் பெற்றிருக்கிறீரா ? அங்ஙனமாயின், அவை பற்றிய விபரங்களையும் அவை பெற்றுக்கொள்ளப்பட்ட திகதிகளையும் குறிப்பிடுக) : ————.

12. சட்ட முறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் (அ) தீர்ப்பு அளிக்கப்பட்ட திகதி, (ஆ) வழக்கு எண், (இ) குற்றத் தீர்ப்பின் தன்மை ஆசியவற்றைக் குறிப்பிடுக : ————.

13. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு உமக்கு இருப்பின், எவ்வளவுக்கு ? : ————.

14. வேறு யாதேனும் விபரங்கள் (விசேட உரிமைகள் ஆதியன) : ——

15. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்துதவியவர்களின் பெயர்களும் பதவிப் பெயர்களும் (அத்தகைய பத்திரங்களின் பிரதிகள்—மூலப்படிகள் அல்ல—இணைத்தனுப்பப்பட வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையிலிருப்பவர்கள் இவ்விபரங்களைக் கொடுக்க வேண்டியதில்லை) : ————.

16. முன்னர் யாதேனும் படையில் சேவை புரிந்து விலகியவராயின்
(அ) படைக் கூற்றின் பெயர் : ————.
(ஆ) வகித்த பதவி : ————.
(இ) சேர்ந்த, விலக்கப்பட்ட திகதிகள் ஆகியவற்றைக் குறிப்பிடுக : ————.

17. (அ) பாடசாலையிலிருந்து விலகிய காலம் தொடக்கம் புரிந்த உத்தியோகம் : ————.

(i) வகித்த பதவிகள் : ————.

(ii) சேர்ந்த, விலகிய திகதிகள் : ————.

(iii) விலகியதற்கான காரணம் : ————.

(ஆ) அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு ஸ்தல ஆட்சிச் சபையின் கீழ் முன்னர் கடமை புரிந்திருப்பின் நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும், (அ) அத்தகைய உத்தியோகம், (ஆ) சேர்ந்த, விலகிய திகதிகள், (இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும் : ————.

18. தற்போது வகிக்கும் உத்தியோக விபரங்கள் : ————.

(i) பதவிப் பெயரும் பதவியின் தரமும் : ————.

(ii) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா, தற்காலிகமானதா, சமயோசிதமா ? : ————.

(iii) தற்போதைய (சகாயப் படிகள் உட்படாத) சம்பளமும் சம்பள விகிதமும் : ————.

(iv) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி : ————.

19. இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————.
விடணப்பதாரியின் கையொப்பம்.

இடம் : ————.

திகதி : ————.

4–849—25.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,851

---

இல. வெ. மு/3/78

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

**டனிஷ் அரசாங்கத்தால் வழங்கப்படும் புலமைப் பரிசில்கள்**

கட்டடக் கலை படிப்புகளுக்கானதும் ஹொப்பின்ஹஜன், நுண்கலை மன்றத்தின் கட்டடக் கலைப் பாடசாலையில் செல்லுபடியானதுமான டென்மாக் அரசாங்கத்தால் வழங்கப்படும் புலமைப் பரிசில்கள் அளித்தற்பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத் தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு 1. புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ந் திகதிய 514 ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச்சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு 2. சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

குறிப்பு 3. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

*2. கால எல்லை.*—இப்புலமைப் பரிசில்கள் சாதாரணமாக ஒரு வருட கால அளவினதாகும். ஒரு வருடத்துக்கு மேற்படாத காலத்துக்கு, அத்தகைய நீடிப்பு புலமைப் பரிசில் பெறுபவரின் படிப்புக்கு முக்கியத்துவம் எனக் கருதப்படுமிடத்து மட்டுமே புலமைப் பரிசிலின் கால எல்லை மேலதிக காலத்துக்கு நீடிக்கப்படும்.

எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்று காரணங்களையிட்டு டென்மாக் அதிகாரிகளின் தற்றுணிபுக் கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

*3. தகவுத்திறன்.*—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும்.

(i) இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 1.9.1969 அன்று 35 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்.

(iii) பிரித்தானிய வேத்தியற் கட்டடக் கலைஞர் நிறுவனத்தின் இடைமானிப் பரீட்சையில் சித்தி எய்தியிருக்க வேண்டும். (குறித்த இப்பரீட்சையை ஒரே தடவையில் தோற்றி பூர்த்தி செய்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

(iv) ஆங்கிலத்தில் உயர்ந்த தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

*குறிப்பு 1.* அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தில் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.9.1969 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

*குறிப்பு 2.* தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனல் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையாராகார். படிவத்தின் 15(ஈ) ம் கூட்டில் அத்தகைய விருப்பந் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. **அளிப்பு நிபந்தனைகள்.**—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும்—

(அ) டென்மாக் தேசத்துக்கு போய்வருதற்கான பிரயாணச் செலவுகள்.

(ஆ) தாபரிப்புச் சகாயப்படி.

(இ) இலவச படிப்பு.

*குறிப்பு.*—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. **நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தாரதரப் பத்திரங்கள் பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப் படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், டென்மாக்குக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்த வரையில் சம்பளங்கள், சகாயப்படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்திய பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் டென்மாக் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்தற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினல் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேற வேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால் பயிற்சியாளர்கள் கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார்.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட கால்த்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விணணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகத்திற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் 1969 ம் ஆண்டு மே மாதம் 10 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூ. 10/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூ. 10/- பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத்தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பர்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2, 17.4.1969.

4-846—25.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,851.

---

வெ. மு./5/182

## கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### பெல்ஜியம், கென்ற் பல்கலைக் கழகத்தில் 1969/70 ஆம் ஆண்டு மண்ணியல் விஞ்ஞானிகளுக்கான (பட்டப்பின்) சர்வதேச பயிற்சி நிலையம்

மணணியல் பட்டப்பின் விஞ்ஞானிகளுக்கு மேற்படி நிலையத்தில் நடைபெறவிருக்கும் பயிற்சி நெறி ஒன்றினை பின்பற்றுதற் பொருட்டு யூனெஸ்கோவின் ஆதரவுடனும் ஒத்துழைப்புடனும் கென்ற் அரசாங்க பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் இணையுரிமைப் பரிசில்களை அளித்தற் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பயிற்சி நெறித் திட்டம்—பொது மண்ணியல்.

—பிரதேச மண்ணியல் (இடைவெப்பநிலை, அயன மண்டல, அயனவயல் பிரதேசங்கள்.

(அ) தொள்கை.

(ஆ) செயல்முறைவேலை (வெளிக்கள வேலை).

—பாறை வகுப்பியலும் பொது புவிவரலாற்றியலும்.

—களிமண் கனிப்பொருளியலும் நுண் மண்ணியலும் உட்பட மண் கனிப் பொருளியல்.

—மண்ணின் அமைப்பும் உருவயியலும் பாகுபாடும்

—புவி உருவயியலும் கால நிலையியலும்.

—மண்வளமும் சீர்படுத்துதலும்.

—மண்பகுப்பு (ஆய்கூட வேலை).

—மண் அளவையின் பொருள் விளக்கம்.

—ஆகாயத்திலிருந்து எடுக்கும் படங்களின் பொருள் விளக்கம்.

(அ) கொள்கை.

(ஆ) செயல்முறை வேலை.

இப்பயிற்சி நெறிக்காலத்தில் 2 மாதங்கள் தேசத்திலுள்ள பல்வேறு பிரதேசங்களில் நடாத்தப்படும் வெளிக்கள வேலையில்கழிக்கப்படும். இப்பயிற்சி நெறியின் முடிவில் நடைபெறும் பரீட்சையில் தேறுபவர்களுக்கு "கலைமாணி"ப் பட்டத்துக்குச் சமனான ஒரு தராதரப் பத்திரம் மண்ணியலில் வழங்கப்படும்.

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வருக்கப்பட்டுள்ளன.

குறிப்பு (1)—புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ந் திகதிய 514 ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச்சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுக்கப்படாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு (2)—சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவால் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவரே கேட்கப்பட வேண்டும்.

குறிப்பு (3)—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

2. கால எல்லை.—இணையுரிமைப் பரிசில் சாதாரணமாக 1969 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தொடக்கம் 9 மாத கால அளவினதாகும்.

எனினும் தூர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு பயிற்சி நெறியை ஒழுங்கு செய்யும் அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. தகவுத்திறன்.—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும்:—

(i) இலங்கை பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 15.10.69 அன்று 45 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்;

(iii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் மண்ணியலில் அல்லது தொடர்புபட்ட துறைகளான புவியியல், விவசாயம், காட்டியல், சூழ்நிலையியல் ஆகியவற்றில் வழங்கப்படும் பட்டம் பெற்றிருக்க வேண்டும்;

(iv) ஆங்கிலம் பேசுவதிலும் எழுதுவதிலும் சிறந்த தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு (1)—அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறிசெய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 15.10.69 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

குறிப்பு (2)—தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப் படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்பந்தமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15 (ஈ) ம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. **அளிப்பு நிபந்தனைகள்.**—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

(அ) இலங்கையிலிருந்து கென்றுக்கு போய்வருவதற்கான ஆகாய விமான பயணச் செலவு ;

(ஆ) வாழ்க்கைச் செலவுகள் யாவற்றையும் சமாளித்தற்குப் போதியளவு உதவிப்படி.

குறிப்பு.—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. **நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள், பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப் படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் பெல்ஜியம் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும்,

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழு செலவையும் (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்த வரையில் சம்பளங்கள், சகாயப்படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்திய பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் பெல்ஜியத்தில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்தற்கு வேண்டிய உடல் நலன், மன நலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேற வேண்டும்.

8. உத்தேச கற்க நெறியைப் பின்பற்றுவதால் பயிற்சியாளர்கள் கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார்.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக்கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் 1969 ம் ஆண்டு மே மாதம் 10 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூபா 10/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூ. 10/- பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத்தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை தீர்தாக்கப் படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
18. 4. 1969.

4—847—25.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,851

குறிப்பு இல. ரிஆர்/எச் எஸ் டபிள்யு/20.

## நிருவாகக் கல்விக் கழகம், பொதுத் திறைசேரி

### வெளிநாட்டில் பயிற்சி

தயலாந்தில், பாங்கொக்கில் பொருளியல் அபிவிருத்தியும் திட்டமிடலும் என்பதற்காகவுள்ள ஐக்கிய நாட்டு ஆசிய நிறுவகத்தில் நடாத்தப்படவுள்ள பயிற்சி நெறிகள் சம்பந்தமாகப் பின்வரும் புலமைப் பரிசில்களை அளிப்பதற்கு அரசாங்கச் சேவையிலுள்ள பதவி உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவழைக்கப்படுகின்றன.

அபிவிருத்தித் திட்டமிடல் பற்றிய ஐம்பெருந்துறையில் பயிற்சி நெறிகள் அளிக்கப்படுகின்றன.

(அ) அபிவிருத்தி நிதி ;

(ஆ) திட்டப்பாகு பாடு ;

(இ) திட்டமிடலுக்குப் பொருளியல் சார்ந்த முறைகள் ;

(ஈ) ஆள்வள அபிவிருத்தியும் சமூகத் திட்டமிடலும் ; விவசாய அபிவிருத்தித் திட்டமிடல்.

**தகவுத் திறன் :**

(i) விண்ணப்பக்காரர் அரசாங்க சேவையில் பதவியினர் தரத்தில் சிரேட்ட உத்தியோகத்தர்ளாகவும் பொறுப்பு வாய்ந்த ஒரு பதவியினர் பதவியில் குறைந்தது ஏழு ஆண்டுச் சேவை செய்தவராகவுமிருத்தல் வேண்டும் ;

(ii) 45 வயதுக்குக் குறைந்தவராயிருத்தல் வேண்டும் ;

(iii) சிறப்பாகப் பொருளியல், புள்ளிவிவரவியல், விவசாயம், கணிதவியல், எந்திரவியல், சமூகவியல் ஆகியவற்றில் உட்பட அங்கீகரித்த பல்கலைக்கழகப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

**கொடைநிபந்தனைகள் :**

(i) தயலாந்தில் பாங்கொக்குக்குச் செல்வதற்கும் திரும்பி வருவதற்கும் பிரயாணச் செலவு ;

(ii) மாத வாழ்க்கைப் படி ;

(iii) பயிற்சிச் செலவு.

**விண்ணப்பங்கள் :**

குறித்த படிவத்தில் அமைந்துள்ள விண்ணப்பங்கள் (ஒவ்வொரு பயிற்சி நெறிக்கும் ஒரு விண்ணப்பம்) நிருவாகப் பயிற்சிப் பணிப்பாளர், 32, கிளென் ஆபர் பிளேசு, கொழும்பு-3 என்னும் முகவரியை 1969 மே மாதம் 10 ஆந் தேதியன்றோ அதற்கு முன்னரோ வந்தடைதல் வேண்டும். விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட நிரந்தரச் செயலாளர் மூலம் அனுப்பப்படல் வேண்டும். எனினும் நிருவாகப் பயிற்சிப் பணிப்பாளருக்கு நேராகவும் விண்ணப்பத்தின் ஒரு பிரதி அனுப்பப்படல் வேண்டும். மேலும் விவரங்கள் தேவைப்படின், நிருவாகக் கல்விக் கழகத்துடன் வழக்கமான அலுவலக நேரங்களில் தொலைபேசி 86236 இல் தொடர்பு கொள்க.

எச். எஸ். வனசிங்க,
நிருவாகப் பயிற்சிப் பணிப்பாளர்,
திறைசேரிச் செயலாளருக்காக.

### ஐக்கிய இராச்சியத்தில் பயிற்சி பெறுவதற்கு விண்ணப்பப் படிவம்

#### பகுதி I

1. விண்ணப்பித்துள்ள பயிற்சிநெறியின் பெயர் :————.
2. உத்தியோகத்தர் பெயர் (கடைசிப் பெயர் முதலில்) :—
3. பிறந்த தேதி :————.
4. சேவையுந் தரமும் :————.
5. அரசாங்கசேவையில் சேர்ந்த தேதி :————.
6. அரசாங்க சேவையில் வகித்த பதவிகளுந் தேதிகளும் :————
7. கல்வித் தகைமைகள் :————.
8. மொழிகளில் தேர்ச்சி :————.
9. குறித்த உத்தியோகத்தர் சென்றுள்ள வெளிநாட்டுப் பயிற்சிநெறிகள், கருத்தரங்குகள், மாநாடுகள் முதலியன :————.
10. குறித்த உத்தியோகத்தர் இலங்கையில் பயின்றுள்ள பயிற்சி நெறிகள் அல்லது பிறகல்வி முயற்சிகள் :————
11. மேலே (9), (10) இல் கூறியுள்ள முயற்சிகள் காரணமாக குறித்த உத்தியோகத்தர் எவ்வேலைத்துறையிலும் செய்துள்ள மாற்றங்களுந் திருத்தங்களும் :————
12. இப்பயிற்சி நெறியை ஏன் தெரிந்தெடுத்தீர் என்பதைச் சுருக்கமாகக் குறிப்பிடுக :————.

............................ ஆகிய நான், இங்கு சமர்ப்பித்துள்ள கூற்றுக்கள் யாவும் எனது நம்பிக்கைக்கெட்டிய வரையில் உண்மையானவையெனவும் சரியானவையுமெனச் சான்றளிக்கின்றேன்.

பயிற்சி பெறுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் இலங்கை அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பிலும் நிருவாகப் பயிற்சிப் பணிப்பாளர் குறிப்பிடும் அத்தகைய அறிவுறுத்தல்களை நிறைவேற்றவும் அத்தகைய நிபந்தனைகட்கு அமைந்தொழுகவும் நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

————
கையொப்பம்.

தேதி :————

#### பகுதி II

.................... திணைக்கள .............................. ஆகிய
(பதவிப் பெயர்)
திரு. ................................ என்பவரின் விண்ணப்பம்
(பெயர்)
விதந்துரைக்கப்பட்டு அனுப்பப்படுகிறது. தெரியப்பட்டால், பயிற்சி நெறியில் பயில்வதற்கு விடுவிக்கப்படுவார்.

தேதி :————

————
நிரந்தரச் செயலாளர்,
.............. அமைச்சு.

4—813—25.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,851

---

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும்

### கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு

#### ஆசிரியர் கலாசாலைகளில் நடைபெறும் சிங்கள/தமிழ் பொதுப் பயிற்சி நெறிகளுக்கு ஆசிரியர்களைச் சேர்த்தல்

ஆசிரியர் கலாசாலைகளில் நடைபெறும் சிங்கள/தமிழ் பொதுப் பயிற்சி நெறிகளுக்கு ஆசிரிய பயிற்சியாளர்களைத் தெரிவு செய்யும் விடயத்தில், பின்வரும் மேலதிக தகைமைகளைப் பெற்றுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது :—

1. க.பொ.த. (உயர்தர) ப. பரீட்சையில் சிங்களத்தில்/தமிழில் சித்தி.
2. க.பொ.த. (உயர்தர) ப. பரீட்சையில் புவியியலில் சித்தி.
3. க.பொ.த. (உயர்தர) ப. பரீட்சையில் சரித்திரத்தில்/ஆட்சியியலில்/பொருளியலில் சித்தி.
4. க.பொ.த. (சாதாரணதர) ப. பரீட்சையில் கணிதத்தில் சித்தி.
5. க.பொ.த. (சாதாரணதர) ப. பரீட்சையில் பௌதிகவியலில்/இரசாயனவியலில்/உயிரியலில்/விவசாயத்தில் சித்தி.

இத்தீர்மானம் பின்வரும் முறையில் செயற்படுத்தப்படும் :—

ஆசிரியர் கலாசாலைப் புகுமுகப் பரீட்சைக்குத் தோற்ற உரித்துடையவர்களும் மேற்குறித்த மேலதிக தகைமைகளைப் பின்வரும் முறையில் பெற்றுள்ளவர்களுமானவர்கள் புகுமுகப் பரீட்சைக்குத் தோற்றுவதி

லிருந்து தவிர்வு அளிக்கப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படுவார்கள். க.பொ.த. (உயர்தர) ப. பரீட்சைப் பெறுபேறுகள் வருடாந்தம் வெளியிடப்பட்டதும் மேற்குறித்த பகுதியில் அடங்குபவர் களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படும் :—

1970 ஆம், 1971 ஆம் வருடங்கள்—மேற்குறித்த 5 மேலதிக பாடங்களுள் குறைந்த பட்சம் 3.

1972 ஆம், 1973 ஆம், 1974 ஆம் வருடங்கள்—மேற்குறித்த 5 மேலதிக பாடங்களுள் குறைந்த பட்சம் 4.

1975 ஆம் வருடமும் அதன் பின்னரும்—மேற்குறித்த 5 மேலதிக பாடங்கள்.

ஏனையோரைப் பொறுத்தவரையில் ஆசிரியர் கலாசாலைப் புகுமுகப் பரீட்சை தொடர்ந்து வழக்கம்போல் நடைபெறும். புகுமுகப் பரீட்சைக்கு இத்திட்டத்தின் கீழ் புறம்பாகத் தெரிவு செய்யப்படுவோரின் எண்ணிக்கை வருடாவருடம் மகா வித்தியாதிபதியால் தீர்மானிக்கப்படும்.

டி. ஜி. தயாரட்ண,
மகா வித்தியாதிபதி.

ஆசிரியர் கலாசாலைகள் கிளை,
கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1969 ம் ௵ ஏப்பிரில் ௴ 14 ந் உ.

4—700—25.4.69 ந் திகதிய வர்த்தமானி, இல. 14,851

---

## தபாற் தலைவர் தந்தியாளர் பரீட்சை—நவம்பர் 1967

22.11.68 ஆம் தேதிய 14,829 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 15.11.68 ந் தேதிய அறிவித்தலைத் தொடர்ந்து, 1967 நவம்பரில் நடைபெற்ற பரீட்சையின் பெறுபேறுகளின்படி மேலும் கீழ்வரும் பரீட்சார்த்திகள் தபாற் தலைவர் தந்தியாளர் சேவையில் நியமனம் பெறுவதற்கு தெரிவு செய்யப் பட்டுள்ளார்கள் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| பெயர் | முகவரி |
|---|---|
| அமரசிறி, பி. எச். .. | " தயானீ ", கப்புகேன, கோனகலப்புற, இருந்துருவை. |
| இரத்தினசிங்கம், எஸ். .. | பொலிஸ் தலைமை அலுவலகம், கொழும்பு 1. |
| இராமநாயகா, ஆர். கே. பி. | " சந்திரா ", உடுகொடை, றுக்ககாவிலை. |
| கனகரத்தினம், எம். .. | நயினுவத்தை வராத்துப்பளை, பருத்தித் துறை. |
| குணபாலா, ஏ. .. | தெல்கொடை, தவுகலகம, இரத்தினபுரி. |
| குணவர்த்தன, பீ. வீ. டபிள்யூ. | 3 ம் பிரிவு, தபாற் கந்தோர் சேமிப்பு வங்கி, கொழும்பு 3. |
| சதானந்தன், வீ. .. | வியாபாரிமூலை, பருத்தித்துறை. |
| சந்திரவன்ச, டபிள்யு. வி. சி. | இல. 89, ஜோர்ஜ் ஆர். டீ. சில்வா மாவத்தை, கொழும்பு 13. |
| சற்குணலிங்கம், என். .. | பூனரிமரத்தடி, கே. கே. எஸ். றோட், கொக்குவில். |
| சில்வா, ஜீ. ஜே. .. | 188, இத்தகொடல்லே றோட், கிம்புலாப் பிட்டியா, நீர்கொழும்பு. |
| சுமனதாசா, எம். .. | பொலிஸ் பயிற்சி வித்தியாலயம் (அலு வலக), எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 |
| சோமசேகரன், ஆர். .. | கோவில் சந்தை, துன்னலை தெற்கு, கரவெட்டி. |
| சோமரத்தின, கே. எச். .. | பனுவலை, நித்தம்புவை. |
| டீ மெல், வீ. எப். எஸ். ஜே. | 13/5, பர்னந்து பிளேஸ், மொறட்டு வெல்ல, மொறட்டுவை. |
| தயாரத்தின, எஸ். பீ. .. | தெய்யற்தறகெதற, தெனகம், ஹக்மனே. |
| தயானந்தா, எஸ். எல். ஏ. | புஷ்பலதா பொகொசத்து கொடை, பம் பற்நதை, கோட்டகொடை. |
| தியாகராசா, எஸ். .. | ஆனியவளை, செம்பியன்பற்று. |
| பர்னந்து, கே. கே. என் .ஜே. | சிலா/கால்தண்டுவன, அரசினர் புத்த கலவன் பாடசாலைக்கு எதிரே, தங் கொட்டுவை. |
| பழனிவேல், கே. .. | 1 ம் வட்டாரம், அனலைதீவு. |
| பாலசந்திரா, ஆர். ஏ. கே.. . | 157, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு |
| பியசேன, ஜீ. ஜீ. .. | வருகொடை, மோலகொடை. |
| பியதாசா, டபிள்யு. எம். பீ. | " விக்கிரமசேவன ", ஊறுமுத்த, போப் பாகொடை, அக்குறஸ்சை. |
| பீற்றர்ஸ், எம். எச். .. | " பிறியந்த ", வென்னப்புவை. |
| பேமசிறீ, எச். எல். .. | கிரிவந்துடுவ, சுல்தானகொடை, மாத் தறை. |
| மனோகரன், எஸ். .. | " சத்தியகிரி ", தீருவில், வல்வெட்டித் துறை. |
| முத்துக்குமாரசுவாமி, எஸ். | பாகுதேவன்புலம், தாவடி வடக்கு, கொக் குவில். |
| முருகேசு, என். .. | இடைக்காடு (வடக்கு), அச்சுவேலி. |
| விக்கிரமசிங்கா, பீ. எம். பீ.. . | யக்தெகிவத்தை, போறதோட்ட, அக்கு றஸ்சை. |
| வைத்தீஸ்வரன், எஸ். .. | சுளிபுரம். |

2. தபாற் பகுதியின் கீழ் பணியாளருக்கிடையில் வரையறுக்கப்பட்ட போட்டியின் கீழ், பின்வரும் பரீட்சார்த்திகள் தபாற் தலைவர் தந்தியாளர் சேவைக்கு நியமனம் பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.—

| பெயர் | முகவரி |
|---|---|
| ஆபா, பீ. .. | அஞ்சல் அலுவலகம், எல்பிட்டி. |
| ஆரியசிங்கா, ஆர். .. | உதவி அத்தியட்சகர் (கட்டிட) அலுவல கம், கொழும்பு 5. |
| ஆரியதாசா, எம். ஆர். .. | தலைமைத் தபால் அதிபர் அலுவலகம், கொழும்பு 1. |
| இராசதுரை, எஸ். .. | அஞ்சல் அலுவலகம், கொக்குவில். |
| இராசையா, கே. .. | அஞ்சல் அலுவலகம், நெடுங்கேணி. |
| எட்வின், ஜே. .. | அஞ்சல் அலுவலகம், காலி |
| கருணதாசா, பீ. வீ. .. | அஞ்சல் அலுவலகம், வெலிகமம். |
| கருணசேன, பி. டீ. .. | அஞ்சல் அலுவலகம், இங்கிரியா. |
| குணபாலா, கே. பி. .. | தலைமைத் தபால் அதிபர் அலுவலகம், கொழும்பு 1. |
| கோஸ்ரன், பி. ஜே. .. | அஞ்சல் அலுவலகம், நாவலப்பிட்டி. |
| சில்வா, டி. டீ. .. | அஞ்சல் அலுவலகம், மகாரகமை. |
| சீலதாசா, யு. .. | அஞ்சல் அலுவலகம், எட்டியாந்தோட்டை. |
| சுகததாசா, என். கே. .. | தலைமைத் தபால் அதிபர் அலுவலகம், கொழும்பு 1. |
| செபமாலை, எஸ். .. | அஞ்சல் அலுவலகம், தலைமன்னார். |
| சோமதாசா, ஏ. ஏ. டீ. .. | அஞ்சல் அலுவலகம், வெலிமடை. |
| தர்மதாசா, டபிள்யு. பி. எல். | கடல் கடந்த தந்திச் சேவை அலுவலகம், கொழும்பு 1. |
| தர்மரத்தின, ஆர். கே. .. | அஞ்சல் அலுவலகம், யக்கலை. |
| தனபாலா, ஜே. .. | தலைமைத் தபால் அதிபர் அலுவலகம், கொழும்பு 1. |
| திரு. நடராசா, வி. .. | அஞ்சல் அலுவலகம், பருத்தித்துறை. |
| பரமசிவம், எஸ். .. | தலைமைத் தந்தி அதிபர் அலுவலகம், கொழும்பு 1. |
| பாலசுந்தரப்பிள்ளை, என். .. | அஞ்சல் அலுவலகம், வேலணை. |
| பீரிஸ், என். ஜே. .. | அஞ்சல் அலுவலகம், கல்கிசை. |
| பெர்ணந்து, எச். ஜீ. .. | பிரதான தந்தி அதிபர் அலுவலகம், கொழும்பு 1. |
| பேமதாசா, பீ. ஏ. .. | அஞ்சல் அலுவலகம், இரத்தினபுரி. |
| முத்துக்குமாரன, எச்.ரீ. எச். | அஞ்சல் அலுவலகம், திக்வெல்லை. |
| விஜயசிறீ, யு. கே. .. | அஞ்சல் அலுவலகம், பன்விலை. |
| ஜயசேகரா, கே. எச். டீ. எப். | அஞ்சல் அலுவலகம், பெந்தோட்டை. |
| ஜயவர்த்தன, எம். .. | அஞ்சல் அலுவலகம், நித்தம்புவை. |

3. அரசாங்கம் இப்பரீட்சார்த்திகளுக்கு உடனே உத்தியோகம் கொடுப் பதற்குப் பொறுப்பு ஏற்காது. ஆனால், இடங்கள் காலியாக வரும்பொழுது அவர்களுக்கு நியமனங்கள் கொடுக்கப்படும். எல்லா நியமனங்களும் மூன்று வருடங்களுக்குப் பரீட்சார்த்தமானவையாகும். சேவையின் விதி களுக்குக் கட்டுப்பட்டவையாகும்.

4. காலக் கிரமத்தில் பரீட்சார்த்திகளுடன் நான் தொடர்பு கொள் வேன்.

வி. எம். அபயசேகரா,
அஞ்சல் அதிபர் நாயகமும்,
தந்திப் போக்குவரத்து அதிபரும்.

அஞ்சல் அதிபர் நாயகம் அலுவலகம்,
6 வது மாடி,
அ. த. தலைமை அலுவலகக் கட்டிடம்,
கொழும்பு 1,
1969 ம் ௵ ஏப்பிரல் ௴ 14 ந் உ.

4–805—25.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,851.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## கடற்றொழில் திணைக்களம்

கொழும்பு 3 இலுள்ள கடற்றொழில் திணைக்களத்துக் கட்டடங்கள் திருத்துதற்கான கேள்விகளை, கடற்றொழில் இயக்குநர் 1969.5.15 ந் தேதி காலை 10.30 மணி வரையும் ஏற்றுக்கொள்வார்.

கேள்விப் படிவங்கள் கொழும்பு 3, காலிமுகத்திலுள்ள கடற்றொழில் திணைக்களத் தாபனக் கிளையில், மீளளிப்புக்கான வைப்புப் பணம் ரூபா 100 வுடன் நண்பகல் 1969.5.14 ந் தேதி நண்பகல் 12.00 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம்.

ஐ. ஓ. கே. ஜீ. பர்ணந்து,
கடற்றொழில் இயக்குநர்.

கடற்றொழில் திணைக்களம்,
காலிமுகம்,
கொழும்பு 3,
1969 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 14 ந் உ.

4–752—25.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,851.

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### அம்பாறை உப பகுதி

பின்வரும் வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் மட்டக்களப்பு பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் 1969 ம் ஆண்டு மே மாதம் 25 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் பின்னர் உடனடியாகத் திறக்கப்படும்.

2. அவ்வவ் வேலைக்கு எதிரே காட்டப்பட்டுள்ள அல்லது அவைக்கு மேற்பட்ட தொகைக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதியப்பட்டுள்ள கொந்தராத்துக்காரர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராமாபிவிருத்திச் சங்கங்கள் மாத்திரமே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகைமையுடையவராவர்.

| கேள்வி இல. | வேலை விபரம் | பதிவுத் தொகை ரூபா | கேள்விப் பத்திரக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|
| அ/28/68-69 : | சம்மாந்துறை 3 ம் கட்டையில் மேற்பார்வையாளரின் வீடு அமைத்துத் தரல் | 25,000 .. | 25 |
| அ/29/68-69 : | கோமாரி (வீரகொடப் பிரிவு வாய்க்கால்) மேற்பார்வையாளரின் வீடு அமைத்துத் தரல் .. | 25,000 .. | 25 |
| அ/30/68-69 : | கல்ஓயா இடது கரையிலுள்ள 15 ம் வாய்க்காலில் திருத்த வேலை செய்து தரல் .. | 25,000 .. | 25 |

3. கேள்விப் பத்திரங்கள் அம்பாறை, கல்முனை அல்லது செங்கலடி உபநீர்ப்பாசன அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1969 ம் ஆண்டு வைகாசி மாதம் 21 ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 4 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருபவர் தமது பதிவுப் புத்தகத்துடன் இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலை விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தல் வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர் கேள்விப்பத்திரம் அனுப்பலாமா என்பதை அறிய ஏதுவாய் இருக்கும். வெற்றுப் பத்திரம் வழங்குமுன் மேற்காட்டிய நீர்ப்பாசன பொறியியலாளர் ஒருவரின் காரியாலயத்திலோ அல்லது கச்சேரியிலோ மேற்காட்டிய கேள்விப் பத்திரக் கட்டணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டுக் காட்டல் வேண்டும்.

4. இக் கேள்விகளுக்கான மேலதிக விபரங்களை அம்பாறை உப நீர்ப்பாசன அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

ஜி. எம். சந்திரதாச,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
அம்பாறை உபபிரிவு.

உப நீர்ப்பாசன அலுவலகம்,
அம்பாறை,
1969 ம் ஆண்டு ஏப்பிரில் மீ 10 ந் உ.

4–746—25.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,851

---

## கமத்தொழிற்றிணைக்களம்

### அம்பாறை மாவட்டத்திலுள்ள சம்மாந்துறை அரசாங்கப் பண்ணைக்கு மூங்கில் குழாய்கள் விநியோகிப்பதற்கான கேள்விகள்

மேல்வரும் வேலை சம்பந்தமாக சீல் வைக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 1969.5.17 ஆம் திகதி மு. ப. 10 மணி வரையும் கமத்தொழில் அதிபர் (ப. மு. ஆ.) ஆல் யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் ஏற்றுக் கொள்ளப்படும்.

(1) சம்மாந்துறை கமத்தொழில் பண்ணைக்கு (அம்பாறை மாவட்டம்) 6,000 மூங்கில் குழாய்கள் விநியோகித்தல்—

அடித்தட்டுடன் கூடிய ஒவ்வொரு மூங்கில் குழாயின் அளவுகள்—

உயரம் — 12 அங். தொடக்கம் 16 அங். வரை

விட்டம் — 4½ அங். தொடக்கம் 6 அங். வரை.

அறவிடும் தொகை நூற்றுக்கு எவ்வளவெனக் குறிப்பிட வேண்டும். பண்ணை அதிபரின் தீர்மானப்படி விநியோகஞ் செய்தல் வேண்டும். விநியோகிக்க வேண்டிய திகதியும், ஒரு தரத்தில் விநியோகிக்க வேண்டிய மூங்கில் குழாய்களின் அளவும் பண்ணை அதிபரால் அறிவிக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் மூங்கில் குழாய்களை மட்டக்களப்பு புகையிரத நிலைய அதிகாரி மூலம் பண்ணை அதிபருக்கு அனுப்புதல் வேண்டும். புகையிரதச் செலவை இத்திணைக்களம் ஏற்றுக் கொள்ளும். கொந்தராத்துக்காரர் மூங்கிற் குழாய்களை பண்ணை அதிபரிடமோ அல்லது அவரின் பிரதிநிதியிடமோ புகையிரத நிலையத்தில் கையளித்தல் வேண்டும். மேற்குறிப்பிட்ட அளவுகளுக்கமையாத மூங்கிற் குழாய்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

2. மேற்கூறப்பட்ட நிலையங்களில் செய்யும் வேலைகள் சேவைகளுக்கு வெவ்வேறுன கேள்விப் பத்திரங்கள் தயாரித்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப் பத்திரத்திற்கும் ரூபா 10/– வைப்புப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

3. யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் கமத்தொழில் அதிகாரி ப. மு. ஆ.) யால் கொடுக்கப்படும் விண்ணப்பப் படிவங்களிலேயே கேள்விப்பத்திரங்கள் கோருதல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் இரு பிரதிகளில் தயாரித்துக் கையொப்பமிட்டு சீல்போட்ட தபால் உறையுள் வைத்து, கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ) கமத்தொழிற் கந்தோர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பாவிட்டால் யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோருக்கு (ப. மு. ஆ.) கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ நேரில் சென்று சீல் வைத்த உறைகளை இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்களடங்கிய தபாலுறையின் இடதுபுற மேல் மூலையில் வேலையின் பெயர்க் குறிப்பு “ ................................ (சேவையின் பெயரும் நிலையமும் கொடுக்கப்பட வேண்டும்) ஆகிய வேலைகளுக்கான கேள்விப்பத்திரம் ” என்று குறிப்பிட வேண்டும். கேள்விப் பத்திரங்களைத் திறந்து பார்த்தபின் அவை கிடைத்தமை பற்றிய உறுதிப் பத்திரங்கள் ஒவ்வொரு கேள்விக்காரருக்கும் அனுப்பப்படும். கேள்விப் பத்திரம் கோரும் முடிவுத் திகதிக்குப் பின்னர் நான்கு நாட்களுக்குள் உறுதிப்பத்திரம் கிடைக்காத கேள்விக்காரர் யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில், கமத்தொழில் அதிகாரியுடன் (ப. மு. ஆ.) தொடர்புகொள்ள வேண்டும்.

4. ஒவ்வொரு கேள்விப் பத்திரத்திற்கும் வைப்புப் பணமாகக் கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டைக் கொடுத்து முடிவுத் திகதிக்கு முன்தினம் பகல் 12 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ள முடியும். கேள்விப்பத்திர வைப்புப் பணம் எச்செயலகங்களிலும் அல்லது கமத்தொழில் இலாகா, பேராதனையில் செலுத்துதல் வேண்டும். வேலை ஒப்பந்தம் கைச்சாத்தானதும் வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவித்தல் கிடைத்த 10 நாட்களுக்குள் கேள்விக்காரர் வேலை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் தனது கேள்விப்பத்திர வைப்புப்பணத்தை இழப்பதுடன் தாமத வேலை செய்யும் கொந்தராத்துக்காரர்களின் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்படுவதுடன் இது சம்பந்தமாக எந்தவிதக் கடிதத் தொடர்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளமாட்டாது. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பண்ணை முகாமையாளர்களினால் கொடுக்கப்படும் திகதிகளில் வேலைகளை ஆரம்பித்து குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தியாக்கத் தவறின் ஒப்பந்தத்தில் கூறியவாறு நஷ்டஈடு செலுத்துவதற்கு ஆளாவார்.

5. கேள்விக்காரர் விரும்பின் கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் பிரசன்னமாகலாம். யாழ்ப்பாணம், கமத்தொழிற் கந்தோரில்

(ப. மு. ஆ,) கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். திறக்கப்படும் நேரமும் திகதியும் கேள்விப்பத்திர முடிவுத் திகதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

6. அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் (இரு பிரதிகளில்) அல்லது அதில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையாத விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கேள்வித் தொகையும் மொத்த மும் மையினால் தெளிவாக எழுதப்பட வேண்டும். கேள்விப்பத்திரங்க ளில் அழித்து எழுதுதலும் பிழை திருத்தங்களும் கேள்விப்பத்திரக் காரரால் முதலெழுத்துக் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரக்காரர் தமது பூரணமான பெயர், முகவரி ஆகியவற்றைப் பெரிய எழுத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் ஒப்பந்தத்தில் கைச் சாத்திடுவதுடன் கேள்விப்பத்திரத்தின் மொத்தத் தொகையின் 5 வீதத்தை பிணைப் பணமாகக் கமத்தொழில் அதிபருடம் செலுத்துதல் வேண்டும். இப்பணம் கொந்தராத்து வேலையைச் சரிவரச் செய்து முடித்த பின்னரே திருப்பித்தர முடியும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் வேலையைச் சரிவரச் செய்து முடிக்காவிடின் அவருடைய பிணைப்பணம் அரசாங்கத்தைச் சேருவதுடன் அவருடைய பெயர் கொந்தராத்துக்காரர்களின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு தாமத வேலை செய்யும் கொந்தராத்துக்காரரின் பட்டியலில் சேகரிக்கப் படும்.

9. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்பொழுது ஒப்பந்தப் பத்திரத்தில் ஒட்டப்படும் முத்திரைக்கான செலவைக் கேள்விப்பத்திரக்காரர் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

10. கொந்தராத்துக்காரர் தமது வேலையைத் திருப்திகரமாகச் செய் யாமலோ குறிப்பிட்ட தினத்திற்குள் பூர்த்தியாக்ககாமல் இருந்தாலோ அவரது கொந்தராத்தை முடிவுறச் செய்யும் அதிகாரம் கமத்தொழில் அதிபருக்குண்டு. இப்படியான சந்தர்ப்பத்தில் கொந்தராத்துக்காரரின் செலவில் அவ்வேலையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வேறுவித ஒழுங்கு செய்வதற்கு கமத்தொழில் அதிபர் உரிமையுடையவராவார்.

11. கொந்தராத்துக்காரர் கோரும் கேள்விகள் முழுவதையுமோ சில பகுதிகளையோ அனுமதிக்கவும் நிராகரிக்கவும் அரசாங்கத்திற்கு உரிமை யுண்டு.

12. கேள்விப்பத்திரக்காரர் கேள்விகள் முடிவு திகதியில் இருந்து மூன்று கிழமையை கேள்விப்பத்திரங்கள் பரிசீலனைசெய்து ஏற்றுக்கொ ள்ளும் தினமாக வைத்திருத்தல் வேண்டும்.

13. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரகாரர் பயிற்றப்பட்ட, பயிற்றப் படாத இலங்கையரையே வேலைக்கமர்த்துதல் வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களில் இருந்தே கூலியாட்களை வேலைக் கமர்த்தல் வேண்டும்.

இந்நிபந்தனைகளுள் ஏதாவது ஒன்றுக்கு அமையாது வேலை செய்யும் கேள்விப்பத்திரக்காரர் கொந்தராத்து வேலை நிராகரிக்கப்படுவதற்கு ஆளாவார். விசேட சூழ்நிலையில் கமத்தொழில் உணவுற்பத்தி மந்திரி யின் எழுத்துமூல அங்கீகாரத்தைப் பெற்றிருந்தால் மாத்திரமே, இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்த முடியும்.

எழுத்து மூலம் அங்கீகாரம் பெறாது இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்துவது அவரது கொந்தராத்து வேலையை இழப்பதற்கு வழிகோலும்.

"இலங்கையர்" என்னும் பதம் இலங்கையின் வம்சாவழியினரை அல்லது பதிவு செய்யப்பட்ட ஒருவரைக் குறிக்கும்.

அமைய ஊழியர்களின் தற்போதைய அல்லது வருங்காலத்தில் செய்யப்படும் சம்பளச்சட்ட திட்டங்களுக்கமைய இக்கொந்தராத்தில் வேலைபார்க்கும் கூலியாட்களின் சம்பளங்கள் நிர்ணயிக்கப்படல் வேண் டும். கமத்தொழில் அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட கமத்தொழில் இலா காவில் வேலைபார்க்கும் ஓர் உத்தியோகத்தர் கொந்தராத்துக்காரரின் வேலை சம்பந்தமான புத்தகங்கள், சம்பளப்பட்டியல், வரவுப்பட்டியல் ஆகிய தாஸ்தாவேஜுகளைப் பார்வையிடுவதற்குக் கோரப்படுவர்.

14. எல்லா அறிவித்தல்களும் கேள்விப்பத்திரக்காரருக்கு நேரடியாக, அல்லது தபால் மூலம் அனுப்பப்பட்டால் அது அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

15. 1934 ம் ஆண்டு தொழிலாளர் நலவுரிமைச் சட்ட இல. 19 (பகுதி 117) இன் கீழ் தொழிலாளரினால் செய்யப்படும் அரசாங்கத்தைப் பாதிக்கும் முறைப்பாடுகளுக்கு கொந்தராத்துக்காரரே பொறுப்புடையவ ராவார்.

16. விரும்பத்தகாதவரை வேலைக்கமர்த்துவதை எதிர்ப்பதற்கு அர சாங்கத்துக்கு உரிமையுண்டு.

17. குற்றப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் தனித்தோ அல்லது கூட் டாகவோ கேள்விப்பத்திரங்கள் கோரின் அவர்களுடன் கமத்தொழில் அதிபர் விரும்பாவிடின் ஒப்பந்தம் செய்துகொள்ளமாட்டார்.

18. மேலும் விவரங்கள் தேவைப்படின் ஒவ்வொரு பண்ணைக்கு முரிய அதிபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பி. ரி. ஜினேந்திரதாச,
பிரதிக் கமத்தொழில் அத்தியட்சகர்.
(க. க. வும். ப.)

பேராதனை.

4—749—25.4.1969 ந் திகதிய வர்த்தமானி இல. 14,851

---

## கமத்தொழிற்றிணைக்களம்

### முருங்கன் கமத்தொழில் பண்ணையில் சூடடித்தல், தூற்றுதல், அளத்தல், மூட்டை கட்டுதல், சூடுமிதிக்கும் களம் அமைத்தல் ஆகியவற்றுக்கான கேள்விகள்

மேல்வரும் வேலைகள் சம்பந்தமான சீல் வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங் கள் 1969.5.17 ஆம் திகதி மு. ப. 10 மணி வரையும் கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) யால் யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) முருங்கன் பண்ணையில் சூடடித்தல், தூற்றுதல், அளத்தல், மூட்டை கட்டுதல் ஆகியவற்றுக்கான கேள்விகள் பின்வரும் ஏக்கர்களில்—

| | | | |
|---|---|---|---|
| ஐ.ஆர் | 8 | நெல் | 13½ ஏக்கர் |
| எச் | 4 | சேற்று விதைப்பு | 4½ ஏக்கர் |
| எச் | 4 | புழுதி விதைப்பு | 3½ ஏக்கர் |
| எச் | 4 | நாற்றுநடுகை | 28 ஏக்கர். |

உழவு இயந்திரம், சூடடிக்கும் பாய், தூற்றும் சுளகு ஆகியவை பண்ணை அதிபரால் வழங்கப்படும். அறவிடும் தொகை ஒரு புசலுக்கு எவ்வளவெனக் கணக்கிடப்பட வேண்டும்.

வேலைகளைப் பண்ணை அதிபருடன் கலந்தாலோசித்து அவருடைய திருப்திக்கமைய பகல் நேரத்தில் செய்தல் வேண்டும். தெரிவுசெய்யப்பட்ட கேள்விக்காரர் கேள்விகள் ஏற்றுக்கொண்டது அறிவிக்கப்பட்ட திகதியி லிருந்து ஒரு கிழமைக்குள் பண்ணை அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய வேலைகளை ஆரம்பித்து ஒருமாத கால தவணைக்குள் செய்து முடித்தல் வேண்டும். நொருங்கும் அரிசி நூற்றுக்கு ½% மேல் போகக்கூடாது. சுத்தப்படுத்திய நெல்லில் பதர் 6% வீதத்திற்குக் கூடுதலாக இல்லாமல் இருந்தால் மட்டுமே பணம் வழங்கப்படும்.

கேள்விக்காரர் உழவு இயந்திரத்தைக் கொண்டுவந்து இவ்வேலை களுக்கு உபயோகிப்பாரானால் ஒரு புசலுக்கு அறவிடும் தொகை எவ்வளவென வேருகக் கணக்கிட வேண்டும்.

(2) முருங்கன் கமத்தொழில் பண்ணையில் 115 கியூப் சூடுமிதிக்கும் களம் (கமத்த) கட்டுதல். களத்தின் அளவுகள் 100 அடி 55 அடி கொண்டதும் சராசரி 2 அடி உயரம் கொண்டதுமாகும். தண்ணீர் தேங்கி நிற்காத வகையில் பக்கங்கள் சரிவுடையதாய் தட்டி மட்டப்படுத்தி அமைத்தல் வேண்டும். பண்ணை அதிபரால் குறிப்பிடப்படும் இடத்தில் இருந்து ½ மைல் தொடக்கம் ¾ மைல் தூரத்தில் இருந்து மண்வெட்டி கொண்டுவந்து நெற் கமத்தில் அவர் குறிப்பிடும் இடத்தில் களம் அமைத்தல் வேண்டும்.

கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்ட 14 நாட்களுக்குள் வேலை தொடங்கி 1969.8.31 ஆம் திகதிக்கு முன்னரோ அத்திகதியிலோ வேலையை முடித்தல் வேண்டும். தவணை கொடுக்கப்படமாட்டாது. ஒரு கியூப்பிற்கு அறவிடும் தொகையைக் குறிப்பிடவேண்டும். பண்ணை அதிபர் அல்லது அவரது பிரதிநிதி திருப்திப்படும் வண்ணம் அவர்கள் குறிப்பிட்டபடி மேற்கூறிய காலத்துக்குள் களம் அமைத்தல் வேண்டும். செய்து முடிக்கப்பட்ட கியூப் அளவின்படியே பணம் வழங்கப்படும்.

2. மேற்கூறப்பட்ட நிலையங்களிலும் செய்யும் வேலைகள் சேவை களுக்கு வெவ்வேறான கேள்விப் பத்திரங்கள் தயாரித்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரங்களுக்கும் ரூபா 10 வைப்புப் பணமாக செலுத்துதல் வேண்டும்.

3. யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) யால் கொடுக்கப்படும் விண்ணப்பப் படிவங்களிலேயே கேள்விப்பத்திரங்கள் கோருதல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திர மும் இரு பிரதிகளில் தயாரித்துக் கையொப்பமிட்டு சீல்போட்ட தபால் உறையுள் வைத்து, கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) கமத்தொழிற் கந்தோர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம்

அனுப்பப்படல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பாவிட்டால் யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோருக்கு (ப. மு. ஆ.) கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ நேரில் சென்று சீல்வைத்த உறைகளை இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்களடங்கிய தபாலுறையின் இடதுபுற மேல் மூலையில் வேலையின் பெயர்க் குறிப்பு “ , (சேவையின் பெயரும் நிலையமும் கொடுக்கப்பட வேண்டும்) ஆகிய வேலைகளுக்கான கேள்விப்பத்திரம்” என்று குறிப்பிட வேண்டும். கேள்விப்பத்திரங்களைத் திறந்து பார்த்தபின் அவை கிடைத்தமை பற்றிய உறுதிப் பத்திரங்கள் ஒவ்வொரு கேள்விக்காரருக்கும் அனுப்பப்படும். கேள்விப் பத்திரம் கோரும் முடிவுத் திகதிக்குப் பின்னர் நான்கு நாட்களுக்குள் உறுதிப்பத்திரம் கிடைக்காத கேள்விக்காரர் யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில், கமத்தொழில் அதிகாரியுடன் (ப. மு. ஆ.) தொடர்பு கொள்ள வேண்டும்.

4. ஒவ்வொரு கேள்விப்பத்திரத்திற்கும் வைப்புப் பணமாக கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைக் கொடுத்து முடிவுத் திகதிக்கு முன்தினம் பகல் 12 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ள முடியும். கேள்விப்பத்திர வைப்புப் பணம் எச்செயலகங்களிலும் அல்லது கமத்தொழில் இலாகா, பேராதனையில் செலுத்துதல் வேண்டும். வேலை ஒப்பந்தம் கைச்சாத்தானதும் வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவித்தல் கிடைத்த 10 நாட்களுக்குள் கேள்விக்காரர் வேலை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் தனது கேள்விப்பத்திர வைப்புப் பணத்தை இழப்பதுடன் தாமத வேலை செய்யும் கொன்தராத்துக்காரர்களின் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்படுவதுடன் இது சம்பந்தமாக எந்தவிதக் கடிதத் தொடர்பையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள மாட்டாது. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பண்ணை முகாமையாளர்களினுல் கொடுக்கப்படும் திகதிகளில் வேலைகளை ஆரம்பித்து குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தியாக்கத் தவறின் ஒப்பத்தத்தில் கூறியவாறு நஷ்ட ஈடு செலுத்துவதற்கு ஆளாவார்.

5. கேள்விப்பத்திரகாரர் விரும்பின் கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் பிரசன்னமாயிருக்கலாம். யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் (ப. மு. ஆ.) கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். திறக்கப்படும் நேரமும் திகதியும் கேள்விப்பத்திர முடிவுத் திகதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

6. அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் (இரு பிரதிகளில்) அல்லது அதில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையாத விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. கேள்வித் தொகையும் மொத்தமும் மையினுல் தெளிவாக எழுதப்பட வேண்டும். கேள்விப்பத்திரங்களில் அழித்து எழுதுதலும் பிழை திருத்தங்களும் கேள்விப்பத்திரக்காரரால் முதலெழுத்துக் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரக்காரர் தமது பூரணமான பெயர், முகவரி ஆகியவற்றை பெரிய எழுத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதுடன் கேள்விப்பத்திரத்தின் மொத்தத் தொகையின் 5 வீதத்தை பிணைப்பணமாகக் கமத்தொழில் அதிபரிடம் செலுத்துதல் வேண்டும். இப்பணம் கொந்தராத்து வேலையைச் சரிவரச் செய்து முடித்த பின்னரே திருப்பித்தர முடியும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் வேலையைச் சரிவரச் செய்துமுடிக்காவிடின் அவருடைய பிணைப்பணம் அரசாங்கத்தைச் சேருவதுடன் அவருடைய பெயர் கொந்தராத்துக்காரர்களின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு தாமத வேலைசெய்யும் கொந்தராத்துக்காரரின் பட்டியலில் சேர்க்கப்படும்.

9. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்பொழுது ஒப்பந்தப் பத்திரத்தில் ஒட்டப்படும் முத்திரைக்கான செலவைக் கேள்விப்பத்திரக்காரர் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

10. கொந்தராத்துக்காரர் தமது வேலையைத் திருப்திகரமாகச் செய்யாமலோ குறிப்பிட்ட தினத்திற்குள் பூர்த்தியாக்காமல் இருந்தாலோ அவரது கொந்தராத்தை முடிவுறச் செய்யும் அதிகாரம் கமத்தொழில் அதிபருக்குண்டு. இப்படியான சந்தர்ப்பத்தில் கொந்தராத்துக்காரரின் செலவில் அவ்வேலையைப் பூர்த்திசெய்யும் பொருட்டு வேறுவித ஒழுங்குகள் செய்வதற்கு கமத்தொழில் அதிபர் உரிமையுடையவராவார்.

11. கொந்தராத்துக்காரர் கோரும் கேள்விகள் முழுதையுமோ சில பகுதிகளையோ அனுமதிக்கவும் நிராகரிக்கவும் அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

12. கேள்விப்பத்திரக்காரர் கேள்விகள் முடிவு திகதியில் இருந்து மூன்று கிழமையை கேள்விப்பத்திரங்கள் பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளும் தினமாக வைத்திருத்தல் வேண்டும்.

13. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் பயிற்றப்பட்ட, பயிற்றப்படாத இலங்கையரையே வேலைக்கமர்த்துதல் வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களில் இருந்தே கூலியாட்களை வேலைக்கமர்த்துதல் வேண்டும்.

இந்நிபந்தனைகளுள் எதாவது ஒன்றுக்கு அமையாது வேலை செய்யும் கேள்விப்பத்திரக்காரர் கொந்தராத்து வேலை நிராகரிக்கப்படுவதற்கு ஆளாவார். விசேட சூழ்நிலையில் கமத்தொழில் உணவுற்பத்தி மந்திரியின் எழுத்துமூல அங்கீகாரத்தைப் பெற்றிருந்தால் மாத்திரமே இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்த முடியும்.

எழுத்து மூலம் அங்கீகாரம் பெருது இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்துவது அவரது கொந்தராத்து வேலையை இழப்பதற்கு வழிகோலும்.

“இலங்கையர்” என்னும் பதம் இலங்கையின் வம்சாவழியினரை அல்லது பதிவு செய்யப்பட்ட ஒருவரைக் குறிக்கும்.

அமைய ஊழியர்களின் தற்போதைய அல்லது வருங்காலத்தில் செய்யப்படும் சம்பளச் சட்ட திட்டங்களுக்கமைய இக்கொந்தராத்தில் வேலைபார்க்கும் கூலியாட்களின் சம்பளங்கள் நிர்ணயிக்கப்படல் வேண்டும். கமத்தொழில் அதிபரினுல் அங்கீகரிக்கப்பட்ட கமத்தொழில் இலாகாவில் வேலைபார்க்கும் ஓர் உத்தியோகத்தர் கொந்தராத்துக்காரரின் வேலை சம்பந்தமான புத்தகங்கள், சம்பளப் பட்டியல்கள், வரவுப்பட்டியல் ஆகிய தாஸ்தாவேஜுகளைப் பார்வையிடுவதற்குக் கோரப்படுவர்.

14. எல்லா அறிவித்தல்களும் கேள்விப்பத்திரகாரருக்கு நேரடியாக அல்லது தபால் மூலம் அனுப்பப்பட்டால் அது அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

15. 1934 ம் ஆண்டு தொழிலாளர் நலவுரிமைச் சட்ட இல. 19 (பகுதி 117) இன் கீழ் தொழிலாளரினுல் செய்யப்படும் அரசாங்கத்தைப் பாதிக்கும் முறைப்பாடுகளுக்கு கொந்தராத்துக்காரரே பொறுப்புடையவராவார்.

16. விரும்பத்தகாதவரை வேலைக்கமர்த்துவதை எதிர்ப்பதற்கு அரசாங்கத்துக்கு உரிமையுண்டு.

17. குற்றப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் தனித்தோ அல்லது கூட்டாகவோ கேள்விப்பத்திரங்கள் கோரின் அவர்களுடன் கமத்தொழில் அதிபர் விரும்பாவிடின் ஒப்பந்தம் செய்துகொள்ள மாட்டார்.

18. மேலும் விவரங்கள் தேவைப்படின் ஒவ்வொரு பண்ணைகளுக்குமுரிய அதிபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பி. ரி. ஜினேந்திரதாச,
பிரதிக் கமத்தொழில் அத்தியட்சகர்.
(க. க. வும் ப.).

பேராதனை,

4–747—25.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,851

---

## சந்தைப்படுத்தல் திணைக்களம்

### தகரத்தகடுகளாலான டப்பாக்கள் வழங்குதல்

சந்தைப்படுத்தல் திணைக்களத்தின் நாரம்பிட்டியில் இருக்கும் பழப் பதார்த்த ஆலைக்கு தகரத்தகடுகளாற் செய்யப்பட்ட டப்பாக்கள் வழங்குதல். கேள்விப்பத்திரங்கள் 1969 யூன் மாதம் 9 ம் திகதி திங்கட்கிழமை பி. ப. 2.30 மணிவரையும் சந்தைப்படுத்தல் திணைக்கள கேள்விச் சபையின் தலைவரால் கொழும்பு 1, சதாம் வீதி, இல. 62 ல் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 1969 யூன் மாதம் 9 ம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிவரையும் சந்தைப்படுத்தல் திணைக்களத்தின் நாரம்பிட்டியில் இருக்கும் கந்தோரில் ரூபா 100 கட்டுப்பணம் செலுத்திய பற்றுச்சீட்டுக் காண்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். முழுவிபரங்களும் சந்தைப்படுத்தல் திணைக்கள ஆணையாளரிடம் நாரம்பிட்டியில் உள்ள கந்தோரில் பெற்றுக் கொள்ளலாம்.

கே. பி. திசநுயகா,
சந்தைப்படுத்தல் திணைக்கள ஆணையாளர்.

கொழும்பு 5,
1969 ம் ஆல் எப்றில் மீ 15 ந உ.

4–701—25.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,851

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### தாள்களாகவுள்ள பத்திரிகைக் கடதாசிக்கான கூறுவிலைகள்

1500 நீள் தொன் வெண்ணிற பத்திரிகைக் கடதாசி 22½" × 35"/50–52 ஜிஎஸ்எம் அளவுடைய 500 தாள்களாக ரீமில் சிறு சிப்பமாக்கப்பட்டு வழங்குவதற்கு முதல்வர்களிடமிருந்து இலங்கை ரூபாயில் விலைக் குறிப்பீடுகள் (கொள்விலையும் கப்பற்கேள்வும்) கொழும்பில் கோரப்படுகின்றன.

(நாணயமாற்று விகிதம் £ 1 ரூபா 14.3417, யூஎஸ் $ 1.00= ரூபா 5.95)

ஒவ்வொரு சிப்பமும் 10–12 ரீம்களாக கட்டுப்பலகையில் கட்டப்பட்டு 1969 ம் ஆண்டு செத்தெம்பர் மாதத்திலிருந்து ஒவ்வொரு மாதமும் 300 தொன் கப்பற்சுமை அனுப்பப்படல் வேண்டும்.

1969 ம் ஆண்டு யூலை மாதம் 10 ம் திகதி பி. ப. 2.00 மணிக்கு விலைக்குறிப்பீடுகள் முடிவடையும்.

எழுத்திலான விலைக்குறிப்பீடுகள் முத்திரையிடப்பட்ட உறையில் "பத்திரிகைக்கடதாசி வழங்குவதற்கான விலைக்குறிப்பீடுகள்" என குறிப்பிடப்பட்டு தலைவர், கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம் 135, யூனியன் பிளேஸ், கொழும்பு, இலங்கை என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

கடல் கடந்த தந்தி மூலம் அனுப்பப்படும் விலைக்குறிப்பீடுகள் "ஈபெம்கோர்ப்", கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

இணைப்படியுடனான மாதிரிகள் விலைக்குறிப்பீடுகள் முடிவடையும் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக இக்காரியாலயத்தில் கிடைக்கப்பெற வேண்டும்.

தி. ப. நாரன்பனுவ,
பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

135, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
1969, ஏப்பிறல் 3.

4–741—25.4.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,851

---

## மதுவரிப் பகுதி

### *சாராயத்தைப் போத்தல்களில் அடைப்பதற்கு கேள்விப் பத்திரங்கள்*

*கீழ்க் குறிக்கப்படும் சாராயக்குதங்களில் ஒன்றிலோ அல்லது அதிகமானவற்றிலோ கீழே குறிக்கப்பட்ட காலத்திற்குச் சாராயத்தைப் போத்தல்களில் அடைப்பதற்கு மதுவரி ஆணையாளரின் அலுவலக கேள்விப் பத்திரச் சபைத் தலைவரால் 1969 ம் ஆண்டு வைகாசி மாதம் 18 ம் திகதி முற்பகல் 11.00 மணிவரை கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.*

| | |
|---|---|
| *சாராயக் குதம் பதுளை*<br>*சாராயக் குதம் மட்டக்களப்பு*<br>*சாராயக் குதம் யாழ்ப்பாணம்*<br>*சாராயக் குதம் இல. 2 களுத்துறை*<br>*சாராயக் குதம் நீர்கொழும்பு*<br>*சாராயக் குதம் திருகோணமலை* | *1969 ம் ஆண்டு ஆடி மாதம் 1 ம் திகதி தொடக்கம் 1970 ம் ஆண்டு ஆனி மாதம் 30 ம் திகதி வரையும்.* |

*2. மதுவரி ஆணையாளரிடமிருந்து பெறக்கூடிய கேள்விப் பத்திரங்களிலேயே விண்ணப்பிக்க வேண்டும். இது சம்பந்தமான சகல விபரங்களையும் மதுவரி ஆணையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். 1969 ம் ஆண்டு வைகாசி மாதம் 17 ம் திகதி பிற்பகல் 3.00 மணிக்குப்பின் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.*

*எம். பி. திசாநாயக்கா,*
*மதுவரி ஆணையாளர்.*

*மதுவரி ஆணையாளரின் காரியாலயம்,*
*கொழும்பு 7.*
*எல்பி/பி/65*

*4-848—25.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,851.*

---

## கேள்விப் பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்

### கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

1969 பெப்புருவரி 6 ந் திகதி முடிவடைந்த 22½" × 35"/50–52 ஜிஎஸ்எம் அளவுடையதும் 500 தாள்கள் கொண்ட பக்கெட்டுகளிலான தாள்களாகவுள்ள பத்திரிகைக் கடதாசி 1500 நீள் தொன்னின் கேள்விப் பத்திர முடிவுகள்.

| சித்தியடைந்த கேள்விப் பத்திரகாரர் | கட்டளையிடப்பட்ட தொகை. நீ/தொன் | விலை கொ.வி. மற்றும் க.கே. நீ/தொன் ஒன்றிற்கு | எந்நாட்டின் உற்பத்தி |
|---|---|---|---|
| (1) மெசர்ஸ் சீன தேசிய சிறு கைத்தொழில் பொருட்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம், சீனு | 1000 | 984 52 | சீனு |
| (2) மெசர்ஸ். பன்ஸல் பல்ப் அன் பேப்பர் (சேல்ஸ்) லிமிடெட், லண்டன் | 500 | 998 67 | யூகோசிலேவியா |

135, யூனியன் பிளேஸ், கொழும்பு 2,
1969 ம் ஞூ ஏப்பிரில் மீ 3 ந வ.

தி. ப. நாரன்பனுவ,
பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கைக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

4–742—25.4.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,851

---

## பொருட்கள் விற்பனையும் பிறவும்

### பொலிஸ் பகுதி

#### பாவிக்கப்பட்ட பொருட்களின் ஏலவிற்பனை

பாவிக்கப்பட்ட காக்கி உடைகள், தோல் சப்பாத்துகள், மழைக்கோட்டுகள் (கறுப்பு/காக்கி), நுளம்பு வலைகள், தும்பு மெத்தைகள், தொப்பிகள், உடுப்புப் பெட்டிகள், கூடாரம் ஆகியன 1969 ம் ஆண்டு மே மாதம் 7 ந் திகதி காலை 9 மணிக்கு பம்பலப்பிட்டி, "ஹவ்லொக்" வீதியிலுள்ள பொலிஸ் மேலதிகப்படை நிலையத்தில் ஏலத்தில் விற்கப்படும்.

விற்பனைக்குரிய பொருட்களை கிழமை நாட்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரையும் போயாவுக்கு முதல் நாட்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 1 மணி வரையும் பார்வையிடலாம்.

பொருட்கள் வாங்கியவுடன் அவற்றின் முழுப் பெறுமதிப்பணமும் கட்டப்படல் வேண்டும்.

எஸ். ரீ. துரைரத்தினம்,
பொலிஸ் அத்தியட்சகர்.

பொலிஸ் மேலதிகப்படை நிலையம்,
பம்பலப்பிட்டி.,
1969 ம் ஞூ மார்ச்சு மீ 30 ந வ.

4–719—25.4.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,851

# ஆய விற்பனையும் குத்தகை விற்பனையும்

## கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை

### மட்டக்களப்பு மாவட்டம் 1969/70

14,846 ம் இலக்கம் கொண்ட 21.3.69 ல் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க வர்த்தமானியில் வெளிவந்த 1969/70 ம் வருடக் கள்ளுக்குத்தகை விற்பனவு விதிகளின்படியும் தற்போது அமுலிலிருக்கும் மது பரிபாலன எல்லா அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருத்தமாக விதிகளின்படியும் கீழ்க்காணும் இடங்களில் கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ்குறிப்பிட்ட திகதி, நேரம் வரை மட்டக்களப்பு அரசாங்க அதிபரால் ஏற்கப்படும். கேள்விப்பத்திரங்கள் ஏற்கும் முடிவு நேரத்திற்கு கேள்விக்காரர்கள் இக்கச்சேரியில் சமுகமளிக்கவேண்டும்.

2. தவறணை இல. 3 ஆரைப்பற்றைத் தவறணைக்கு 1,000/ ரூபாவும் மற்றய தவறணைகளுக்கு 500/ ரூபாவும் கச்சேரியில் கட்டிப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை காட்டி, எல்லாக் கச்சேரிகளிலும், மதுவரி அதிகாரி கந்தோர், கொழும்பு, உதவி மதுவரி அதிகாரி கந்தோர், திருகோணமலை, மதுவரி மேற்பார்வையாளர் கந்தோர் மட்டக்களப்பு ஆகிய இடங்களிலிருந்து பெறக்கூடிய விண்ணப்பப்பத்திரங்களிலேயே விண்ணப்பிக்கவேண்டும்.

3. 14,846 ம் இலக்கம் கொண்ட 21.3.69 ல் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க வர்த்தமானியில் காணப்படும் 1969/70 ம் வருடக் கள்ளுக் குத்தகை விற்பனவு விதி இல. 4 (3) (1) படி பெறுமதிச்சான்றிதழ் ஒவ்வொரு கேள்விப்பத்திரத்துடன் அணைக்கப்படவேண்டும்.

4. தற்போதிருக்கும் தவறணை நிலம் தொடர்ந்து வருங்காலத்திற்கும் இருக்குமென்பதற்கு உத்தரவாதமில்லை.

5. ஏனைய விபரங்கள் மட்டக்களப்புக் கச்சேரியில் பெற்றுக்கொள்ளலாம்.

மட்டக்களப்பு கச்சேரி,
1969 ம் ஆண்டு ஏப்பிரல் 14 ந் உ.

இசற். எஸ். றபாயல்,
மட்டக்களப்பு அரசாங்க அதிபருக்காக.

#### குறிக்கப்பட்டுள்ள இடங்கள்

| கள்ளுத் தவறணை இல. | பிரிவு | தவறணை இருக்கும் உள்ளூர் பகுதி | கேள்வி விண்ணப்பம் முடிவுறும் | |
|---|---|---|---|---|
| | | | திகதி | நேரம் |
| 1. | எருவூர் பற்று .. .. | ஆறுமுகத்தான் குடியிருப்புக் கிராமத்துள் .. | மே 19, 1969 .. | மு.ப. 10.00 |
| 2. | மட்டக்களப்பு மாநகரசபை .. .. | மட்டக்களப்பு மாநகரசபை 7 ம் வட்டாரம் .. | டிை .. | மு.ப. 11.00 |
| 3. | மண்முனைப்பற்று வடக்கு .. .. | ஆரைப்பற்றைக் கிராமத்தில் .. .. | டிை .. | ந.ப. 12.00 |
| 4. | மண்முனை தெற்கு எருவில் போரை தீவுப்பற்று .. | மாங்காட்டுக் கிராமத்தில் .. .. | டிை .. | பி.ப. 2.00 |
| 5. | டிை .. .. | கோட்டைக் கல்லாறு கிராமத்தில் .. .. | டிை .. | பி.ப. 3.00 |
| 6. | டிை .. .. | எருவில் கிராமத்தில் .. .. | டிை .. | பி.ப. 4.00 |

**குறிப்பு.**—மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 2 ம் இலக்கத் தவறணையான கோட்டமுனை தவிர்ந்து எல்லாத் தவறணைகளும் தினமும் காலை 8.00 மணிக்குத் திறக்கப்பட்டு பி.ப. 7.00 மணிக்கு மூடப்படும். கோட்டமுனைத்தவறணை தினமும் காலை 8.00 மணிக்கு திறக்கப்பட்டு மாலை 7.30 மணிக்கு மூடப்படும்.

4–797—25.4.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,851.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* **அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**அட்டவணை—1969**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| சனவரி | 3.1.69 | வெள்ளி | 24.12.68 | செவ்வாய் | பி. ப. 3.30 |
| | 9.1.69 | வியாழன் | 3. 1.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 16.1.69 | வியாழன் | 9. 1.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 24.1.69 | வெள்ளி | 16. 1.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 31.1.69 | வெள்ளி | 24. 1.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| பெப்புருவரி | 7.2.69 | வெள்ளி | 31. 1.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 14.2.69 | வெள்ளி | 7. 2.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 21.2.69 | வெள்ளி | 14. 2.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 27.2.69 | வியாழன் | 20. 2.69 | வியாழன் | பி. ப. 3.30 |
| மாச்சு | 7.3.69 | வெள்ளி | 27. 2.69 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 14.3.69 | வெள்ளி | 7. 3.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 21.3.69 | வெள்ளி | 14. 3.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 28.3.69 | வெள்ளி | 21. 3.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| ஏப்பிறல் | 3.4.69 | வியாழன் | 27. 3.69 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 11.4.69 | வெள்ளி | 31. 3.69 | திங்கள் | பி. ப. 3.30 |
| | 18.4.69 | வெள்ளி | 8. 4.69 | செவ்வாய் | ந. ப. 12.00 |
| | 25.4.69 | வெள்ளி | 18. 4.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 30.4.69 | புதன் | 23. 4.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| மே | 9.5.69 | வெள்ளி | 30. 4.69 | புதன் | பி. ப. 3.30 |
| | 15.5.69 | வியாழன் | 9. 5.69 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 22.5.69 | வியாழன் | 15. 5.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 30.5.69 | வெள்ளி | 22. 5.69 | வியாழன் | ந. ப. 12.00 |
| யூன் | 6.6.69 | வெள்ளி | 30. 5.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 13.6.69 | வெள்ளி | 6. 6.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 20.6.69 | வெள்ளி | 13. 6.69 | வெள்ளி | ந. ப. 12.00 |
| | 27.6.69 | வெள்ளி | 20. 6.69 | வெள்ளி | பி. ப. 3.30 |

*அரசாங்க அச்சகம்,*
கொழும்பு,
1968 ம் ௵ டிசெம்பர் ௴ 20 ந் ௳.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*பதில் அரசாங்க அழுத்தகன்.*